# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## C.C.No.61/2024

| | | | |
|---|---|---|---|
| Deposition of | LW1 | Examined as | : PW1 |
| Name | : ஞானசேகரன் | Defence | : |
| Father Name | : கலியபெருமாள் | Court | : |
| Village | : அன்னவாசல். | Taluk | : |
| Calling | : | Religion | : |
| Age | : 52 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day. 13.12.2024.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை:–

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.08.2020 ஆம் ஆண்டு காலை 09.00 மணியளவில் எதிரி காமராஜ். கிரகதாஸ், பிரபாகரன், குமார், தாஸ், உதயராஜ், ஆனந்தபாபு, மாலதி, தினேஷ், ஜான்சன், உலகநாதன் ஆகியோர்கள் எனது வீட்டிற்கு அருகில் உள்ள காலி மனையை 23.08.2006 அன்று கல்யாணி என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன். அதில் தமிழ்நாடு அரசு மானியத்தில் மாட்டுக்கொட்டகை அமைத்து அதில் நான் 2 பசுமாடுகள், 4 ஆடுகளை நான் வளர்த்து வந்தேன். மேற்படி கொட்டகைக்கு மேற்கு பகுதியில் 1ம் எதிரி காமராஜ் இடம் உள்ளது. அந்த இடத்திற்கு செல்லும் வழிக்காக மேற்படி இடத்தை என்னிடம் கிரயம் கேட்டார்கள். நான் கொடுக்கவில்லை. அதன் பிறகு மேற்படி இடத்தை நான் கொடுக்கமாட்டேன் என்று கூறியதை மனதில் வைத்துக்கொண்டு 18.08.2020 அன்று காமராஜ் மற்றும் 11 நபர்கள் எனது வீட்டிற்கு வந்து வீட்டு மனையில் இருந்த பூவரசு மரம், வேப்பம்மரம், தூங்குமூஞ்சி மரம் போன்ற மரங்களை வெட்டி போட்டுவிட்டார்கள். கொட்டகையில் இருந்த ஆடு, மாடுளை அடித்து விரட்டிவிட்டார்கள்.

எதிரி தினேஷ் என்பவர் ஆடு, மாடுகளை கம்பாலும், அருவாளின் பின்புறத்தாலும் அடித்து விரட்டிவிட்டார். உடனே நான் மற்றும் எனது குடும்பத்தாருடன் பெரம்பூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்க புறப்பட்டோம். அப்போது

நாங்கள் புறப்பட்ட ஆட்டோவை பிடித்து இழுத்து மறித்தார்கள். பின்னர் பெரம்பூர் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். பெரம்பூர் காவல் நிலைய ஆய்வாளர் எனது புகாரைப்பெறாமல் அலட்சியப்படுத்தினார்கள். பின்னர் மயிலாடுதுறை கோட்டாச்சியர் அலுவலத்திற்கு சென்று குடும்பத்துடன் தர்ணா போராட்டம் நடத்தினோம். கோட்டாச்சியரின் நேர்முக உதவியாளர் எங்களிடம் நாங்கள் காவல் ஆய்வாளரிடம் பேசுகிறோம் எனவே தர்ணாவை கைவிடுமாறு கூறினார்கள். பின்னர் நாங்கள் தர்ணாவை கைவிட்டுவிட்டோம். போலீசாரிடம் விசாரணை நடத்தக்கோரி மயிலாடுதுறை காவல் கண்காணிப்பாளிடம் புகார் கொடுத்தேன். புகாரைப்பெற்று நடவடிக்கை எடுப்பதாக கூறினார்கள். நடவடிக்கை எடுக்காததால் நான் இந்த வழக்கினை தாக்கல் செய்தேன்.

03.02.2020 தேதியிட்ட வீட்டுவரி ரசீதின் நகல் **ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பெயரில் உள்ள மின்கட்டண அட்டையின் அசல் **ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்நீதிமன்றத்தில் நான் எதிரிகள் கல்யாணி,. புருஷோத்தமன். காமராஜ் ஆகியோர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள O.S.56/2020ன் வழக்குரையின் நகல் **ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.08.2020 அன்று நான் எதிரிகளுக்கு எதிராக பெரம்பூர் காவல் ஆய்வாளரிடம் கொடுத்த புகார் மனுவின் நகல் **ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் மேற்படி புகாரைப்பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை **ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.08.2020 அன்று நான் மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகாரின் நகல் **ம.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பை காவல் கண்காணிப்பாளர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.08.2020 அன்று நான் மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகாரின் நகல் **ம.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.08.2020 அன்று நான் மயிலாடுதுறை மாவட்ட துணைக்காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிய புகாரின் நகல் **ம.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.08.2020 அன்று மயிலாடுதுறை வருவாய் கோட்டாச்சியர் அவர்களுக்கு அனுப்பிய புகாரின் நகல் **ம.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பை கோட்டாச்சியர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை **ம.சா.ஆ.11**ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.08.2020 தேதியிட்ட தினகரன் நாளிதழின் பிரதி **ம.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.08.2020 அன்று மயிலாடுதுறை மாவட்ட

துணைக்கண்காணிப்பாளருக்கு அனுப்பி அறிவிப்பானது மயிலாடுதுறை வருவாய் கோட்டாச்சியர், பெரம்பூர் காவல் ஆய்வாளர், தரங்கம்பாடி வட்டாச்சியர் ஆகியோர்களுக்கு மேற்படி புகாரின் நகல்கள் அனுப்பப்பட்டது. அந்த புகார்களை வட்டாச்சியர் மற்றும் பெரம்பூர் காவல் ஆய்வாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை முறையே **ம.சா.ஆ.13 மற்றும் ம.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகளுக்கு தகுந்த தண்டனை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.